# ஐம்பது வீதத்திற்கு மேல் வாக்குகளைப்பெற்று வெற்றிபெறுவது யாருக்கும் சாத்தியமில்லை!

### கட்சியினரிடம் ஜனாதிபதி ரணில் தெரிவிப்பு



இலங்கை நாடாளுமன்றத்தைப் பிரதிநிதித்துவம் செய்யும் அனைத்துக் கட்சிகளும் ஒன்றிணைந்தால் கூட தேர்தலில் ஐம்பது சதவீதத்தைக் கடந்து வாக்குகளைப் பெறுவது என்பது சாத்தியமில்லை, என ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க தெரிவித்துள்ளார்.

அதேவேளை, அதிகாரம் அல்லது செல்வாக்கு இன்று யாருக்கு உள்ளது என்பதையும் யாராலும் கணிக்க இயலாது எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

பழைமைவாய்ந்த சிந்தனைகளுடன்செயற்படுவதால் மக்கள் ஆதரவைப் பெற்றுக்கொள்வதோ, தேர்தலில் வெற்றி பெறுவதோ இன்றைய காலகட்டத்தில் சாத்தியம் இல்லை எனவும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

ஐக்கிய தேசியக் கட்சியின் செயற்குழு உறுப்பினர்கள் ஜனாதிபதியை நேற்றைய தினம் சந்தித்துக் கலந்துரையாடிய போதே, அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

நாடாளுமன்றத்தைப் பிரதிநிதித்துவம் செய்யும் அனைத்துக் கட்சிகளும் ஒன்றிணைந்தால் கூட 50 வீத வாக்குகளுக்கு மேல் பெறமுடியாது. எனவே, எந்த ஒரு கட்சியும் பெரும்பான்மை பெற்று வெற்றி பெறுவது என்பது சாத்தியப்படாது, என அவர் குறிப்பிட்டுள்ளார்.

1977 ஆம் ஆண்டுக்குப் பின்னர், நாடாளுமன்றத் தேர்தலில், எந்த ஒரு கட்சிக்கும் மூன்றில் இரண்டு பெரும்பான்மை கிடைக்கவில்லை. எனவே ஏனைய கட்சிகளின் ஆதரவைப் பெற்றே ஆட்சியை அமைக்க முடிந்தது, என்பதையும் ஜனாதிபதி சுட்டிக்காட்டியுள்ளார்.

அத்துடன், ஐக்கிய மக்கள் சக்திக்கோ மக்கள் விடுதலை முன்னணிக்கோ அல்லது பொதுஜன பெரமுனவுக்கோ 50 வீதத்தை கடந்த அதிகாரமோ மக்கள் செல்வாக்கோ இருக்கும் எனக் கூற முடியாது எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

இதற்கு முன்னரும் இதே கருத்தை ரணில் விக்ரமசிங்க தெரிவித்திருந்தபோது எதிர்க்கட்சிகள் கடும் விமர்சனங்களை முன்வைத்திருந்தமை குறிப்பிடத்தக்கது.

மாலைக்கதிர்
Maalaikkathir

சாயல் 01 வள்ளுவர் ஆண்டு 2054 வைகாசி 29 திங்கட்கிழமை 12.06.2023 கதிர் 01

செய்திகளையும் இன்னும் பல காணொளிகளையும் பார்வையிட
காலைக்கதிர் TV
காலைக்கதிர் TV YouTube தளம்

# காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவுகளுக்கு உடனடித் தீர்வு சர்வதேச செஞ்சிலுவைச் சங்கப் பணிப்பாளர் வலியுறுத்தல்

**வடக்கு கிழக்கில் வலிந்து காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவுகள் தசாப்தம் கடந்தும் தீர்வின்றி அனுபவித்து வரும் துன்பங்களுக்கு உடனடித் தீர்வு வழங்க வேண்டும் என சர்வதேச செஞ்சிலுவைச் சங்கம் வலியுறுத்தல் விடுத்துள்ளது.**

**சர்வதேச செஞ்சிலுவைச் சங்கத்தின் ஆசிய, பசுபிக் பிராந்தியத்துக்கான பணிப்பாளர் கிறிஸ்டின் சிபோல்லா, இலங்கைக்கு உத்தியோகபூர்வ விஜயமொன்றை மேற்கொண்டுள்ளார்.**

**அதன்போது, இலங்கை வெளிவிவகார அமைச்சர் அலி சப்ரியைச் சந்தித்து கலந்துரையாடிய அவர், இந்த வலியுறுத்தலை வெளியிட்டுள்ளார்.**

**காணாமல் ஆக்கப்பட்டோரின் குடும்பத்தினர் நீண்டகாலமாக அனுபவித்து வரும் துன்பங்களுக்கு உடனடியாகத் தீர்வை வழங்க வேண்டியதன் அவசியம் குறித்து வெளிவிவகார அமைச்சர் அலி சப்ரியிடம் அவர் வலியுறுத்தியுள்ளார்.**

**மேலும், இலங்கையில் வாழும் அனைத்துச் சமூகங்களையும் சேர்ந்த காணாமல் ஆக்கப்பட்டோரின் குடும்பத்தினருக்கும் தீர்வை வழங்க வேண்டியதன் அவசியம் குறித்தும் அவர் குறிப்பிட்டிருக்கிறார்.**

### ஊடக நிறுவனங்களுடன் இணைந்து நீதிமன்றம் செல்லும் எதிர்க்கட்சிகள்!

ஒளி - ஒலிபரப்பு சட்டமூலத்துக்கு எதிராக ஒன்றிணைந்த எதிர்க்கட்சிகள் ஊடக நிறுவனங்களுடன் இணைந்து நீதிமன்றம் செல்வதற்கு முடிவெடுத்துள்ளன.

இது தொடர்பில் நாடாளுமன்ற உறுப்பினர்களுடன் விரிவாகக் கலந்துரையாடுவதற்கு ஊடகச் சங்கங்கள் தீர்மானித்துள்ளன. அத்தோடு, இந்தச்சட்டமூலத்துக்கு எதிராக வாக்களிப்பதற்கு அனைத்து எதிர்க்கட்சிகளும் தீர்மானித்துள்ளன.

# நாடாளுமன்றத்தைக் கலைத்துத் தேர்தல்! உடனடியாக நடத்த சஜித் கட்சி வலியுறுத்து



கடந்த வருடப் புரட்சியால் மக்கள் ஆணையை இழந்த நாடாளுமன்றத்தை உடனடியாகக் கலைத்துத் தேர்தல் நடத்தப்பட வேண்டும் என்ற நிலைப்பாட்டில் நாங்கள் உள்ளோம், என்று ஐக்கிய மக்கள் சக்தியின் நாடாளுமன்ற உறுப்பினர் எரான் விக்கிரமரத்ன தெரிவித்தார்.

கடந்த வருடம் புரட்சி ஒன்று இடம்பெற்றது. அந்தப் புரட்சியின் விளைவாக ஜனாதிபதிப் பதவியிலிருந்து கோட்டாபய ராஜபக்ச விரட்டப்பட்டார் பிரதமர் பதவியிலிருந்து மஹிந்த ராஜபக்ச விரட்டப்பட்டார் நிதி அமைச்சர் பதவியிலிருந்து பஸில் ராஜபக்ச விரட்டப்பட்டார். அமைச்சரவையும் விரட்டப்பட்டது. மொத்தமாக அரசே விரட்டப்பட்டது.

கோட்டாபய சட்டரீதியான ஜனாதிபதி. அப்படியிருந்தும் அவருக்கான அங்கீகாரம் இல்லாமல் போனது. நாடாளுமன்றத்துக்கும் இதே நிலைதான்.

இதனால் மக்கள் விரும்புகின்றவர்களை நாடாளுமன்றத்துக்கு அனுப்புவதற்கு மக்களுக்குச் சந்தர்ப்பம் வழங்கப்பட வேண்டும். அப்படிப்பட்ட நாடாளுமன்றத்தால்தான் நாட்டைச் சரியாக இட்டுச் செல்ல முடியும். இதனால் தேர்தல் நடத்தப்பட வேண்டும் என்ற நிலைப்பாட்டில் நாம் நிற்கின்றோம், என்று எரான் விக்கிரமரத்ன குறிப்பிட்டிருக்கிறார்.

## ஆளுநர் - சுமந்திரன் சந்திப்பு



வடக்கு மாகாண ஆளுநராக பதவியேற்ற பி.எஸ்.எம். சாள்ஸை பாராளுமன்ற உறுப்பினரும் ஜனாதிபதி சட்டத்தரணியுமான எம்.ஏ.சுமந்திரன் சந்தித்துக் கலந்துரையாடியுள்ளார்.

யாழ்ப்பாணத்தில் உள்ள ஆளுநர் அலுவலகத்தில் இன்று காலை இடம்பெற்ற இந்தச் சந்திப்பின்போது வடக்கின் வளர்ச்சி மற்றும் நிர்வாக நடவடிக்கைகள் தொடர்பாகக் கலந்துரையாடப்பட்டதாகத் தெரிவிக்கப்படுகிறது.

வடக்கு மாகாண ஆளுநராக இருந்த ஜீவன் தியாகராசா ஜனாதிபதியால் நீக்கப்பட்டு, புதிய ஆளுநராக பி.எஸ்.எம். சாள்ஸ் நியமிக்கப்பட்ட பின்னர் முதற் தடவையாக இவர்களிருவருக்குமிடையில் சந்திப்பு இடம்பெற்றுள்ளது.

### ஒளி – ஒலிபரப்புச் சட்டமூலம் நிறைவேற்றப்பட்டால் 33 ஊடக நிறுவனங்களின் அனுமதிப் பத்திரம் இரத்து

ஒளி - ஒலிபரப்புச்சட்டமூலம் நிறைவேற்றப்பட்டால் 33 ஊடக நிறுவனங்களின் அனுமதிப் பத்திரங்கள் 6 மாதங்களுக்குள் இரத்தாகும் என்று தகவல்கள் தெரிவிக்கின்றன.

அவ்வாறு இரத்தானால் புதிய அனுமதிப் பத்திரத்தைப் பெறவேண்டும் என்றும், அப்படிப் புதிய அனுமதிப் பத்திரத்தை வழங்குவதா, இல்லையா என்று ஜனாதிபதியால் நியமிக்கப்படும் ஐவர் கொண்ட ஆணைக்குழுவே தீர்மானிக்கும் என்றும் அந்த தகவல்கள் கூறுகின்றன.

மேலும், ஊடகவியலாளர்களைச் சிறைக்கு அனுப்புவதற்கும், ஊடக நிறுவனங்களில் தேடுதல் நடவடிக்கையை மேற்கொள்வதற்கும் இந்தச் சட்டமூலம் வழிவகுக்கும் என்றும் அந்தத் தகவல்கள் மேலும் தெரிவிக்கின்றன.

# தொல்பொருள் திணைக்களப் பணிப்பாளர் பேராசிரியர் அனுர மனதுங்க இராஜினாமா



தொல்பொருள் திணைக்களத்தின் பணிப்பாளர் நாயகம் பேராசிரியர் அனுர மனதுங்க அந்தப் பதவியிலிருந்து இராஜினாமா செய்துள்ளார்.

இந்த இராஜினாமாக் கடிதத்தை அவர் அமைச்சின் செயலாளருக்கு அனுப்பியுள்ளதாக புத்தசாசன, சமய மற்றும் கலாசார அலுவல்கள் அமைச்சர் விதுர விக்ரமநாயக்க தெரிவித்துள்ளார்.

வடக்கு, கிழக்கில் காணிகளைப் பறித்து விகாரைகளை அமைக்கும் செயற்திட்டத்தை தொல்பொருள் திணைக்களம் இடைநிறுத்த மறுப்பது பெரும் அதிர்வலைகளை ஏற்படுத்தியுள்ளது. ஜனாதிபதியின் நிறைவேற்று அதிகாரத்தை மீறி அல்லது, அதற்கு அடிபணியாமல், தொல்பொருள் திணைக்களம் சுயமாக அதிகாரத்தைப்

2➤

இலங்கையிலிருந்து வெளிவரும் ஒரேயொரு மாலை இதழ்

# அஸ்வினைத் தேர்வு செய்யாதது ஏன்? டுவிட்டர் பதிவில் சச்சின் கேள்வி




லண்டன் கெனிங்டன் ஓவல் விளையாட்டரங்கில் நடைபெற்ற ஐ.சி.சி. உலக டெஸ்ட் சம்பியன்சிப் இறுதிப் போட்டியில் அவுஸ்திரேலிய அணி இந்தியாவை 209 ஓட்டங்களால் வெற்றியீட்டியது.

இந்த நிலையில், உலக டெஸ்ட் சம்பியன் கிண்ணத்தை வென்ற அவுஸ்திரேலிய அணிக்கு சச்சின் டெண்டுல்கர் டுவிட்டரில் தனது வாழ்த்தினைத் தெரிவித்துள்ளார்.

அத்துடன், அஸ்வினை இந்திய அணியில் விளையாடிய 11 வீரர்களுக்குள் ஏன் தேர்வு செய்யவில்லை? எனவும் சச்சின் டெண்டுல்கர் கேள்வி எழுப்பியுள்ளார்.

அவரது டுவிட்டர் பதிவில், வெற்றி பெற்ற அவுஸ்திரேலியா அணிக்கு வாழ்த்துகள். ஸ்டீவ் ஸ்மித் மற்றும் ஹெட் இருவரும் ஆட்டத்தை தங்களுக்கு சாதகமாக அமைக்க முதல் நாளிலேயே உறுதியான அடித்தளத்தை அமைத்தனர்.

ஆட்டத்தில் நிலைத்திருக்க இந்தியா முதல் இன்னிங்ஸில் பெரிய அளவில் துடுப்பெடுத்தாட வேண்டியிருந்தது. ஆனால், அவர்களால் முடியவில்லை.

இந்தியாவிற்கு சில நல்ல தருணங்கள் இருந்தன. ஆனால், தற்போது உலகின் நம்பர் 1 டெஸ்ட் பந்து வீச்சாளராக இருக்கும் அஸ்வினை அணியின் 11 வீரர்களுக்குள் தேர்வு செய்யாதது ஏன்? என என்னால் புரிந்து கொள்ள முடியவில்லை.

அவுஸ்திரேலியாவின் முதல் 8 துடுப்பாட்ட வீரர்களில் 5 இடது கை வீரர்கள் இருந்ததை நாம் மறந்துவிடக் கூடாது, என தெரிவித்துள்ளார்.

# லங்கா பிரீமியர் லீக்கில் சுரேஷ் ரெய்னா!



முன்னாள் இந்திய கிரிக்கெட் அணி வீரர் சுரேஷ் ரெய்னா, இந்த வார இறுதியில் நடைபெறும் லங்கா பிரீமியர் லீக் 2023 வீரர்களுக்கான ஏலத்தில் இணைந்துள்ளன எனத் தகவல் வெளியாகியுள்ளது.

அத்துடன், அவரது அடிப்படை விலை 50,000 அமெரிக்க டொலராக நிர்ணயிக்கப்பட்டுள்ளது எனவும் தெரியவந்துள்ளது.

எதிர்வரும் ஜூலை 30 முதல் ஓகஸ்ட் 20 ஆம் திகதி வரை நடைபெறவிருக்கும் இந்த ஆண்டுக்கான லங்கா பிரீமியர் லீக் போட்டியில், ஐந்து அணிகளின் உரிமையாளர்கள் தங்கள் அணிகளைப் பிரதிநிதித்துவப்படுத்துவதற்கான வீரர்களை தேர்வு செய்வதற்கான ஏலம் எதிர்வரும் 14 ஆம் திகதி நடைபெறவுள்ளமை குறிப்பிடத்தக்கது.

# போதைப்பொருள் விவகாரத்தில் கொழும்பில் பெண் மீது தாக்குதல்

கொழும்பு - மாளிகாவத்தை “லக்கிரு செவன” அடுக்குமாடிக் குடியிருப்பில் வசிக்கும் பெண் ஒருவர் கூரிய ஆயுதத்தால் தாக்கப்பட்டுள்ளார் எனப் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

போதைப்பொருள் விற்பனையில் ஏற்பட்ட முரண்பாடு காரணமாகவே குறித்த தாக்குதல் மேற்கொள்ளப்பட்டதாகவும், சம்பவத்துடன் தொடர்புடைய இருவர் கைதுசெய்யப்பட்டுள்ளனர் எனவும் தெமட்டகொட பொலிஸார் குறிப்பிட்டுள்ளனர்.

இந்தத்தாக்குதலில் படுகாயமடைந்த 38 வயதுடைய பெண், கொழும்பு தேசிய வைத்தியசாலையின் தீவிர சிகிச்சைப் பிரிவில் சிகிச்சை பெற்றுவருவதாகவும் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

அடுக்குமாடிக் குடியிருப்பின் எட்டாவது மாடியில் வசிக்கும் குறித்த பெண், கீழ்த்தளத்தில் உள்ள வீடொன்றில் பிரார்த்தனையில் ஈடுபட்டிருந்தபோது, தாக்குதல்தாரிகள் அவரது தலைமுடியைப் பிடித்து அருகில் உள்ள மற்றொரு வீட்டிற்கு இழுத்துச் சென்று, சரமாரியாக வெட்டியதாக பொலிஸாரின் விசாரணைகள் மூலம் தெரிய வந்துள்ளது.

தாக்குதல்தாரிகள் மீது மக்கள் எதிர்த்தாக்குதல் நடத்த முற்பட்ட போது, தாக்குதல் நடத்திய இருவரும் தப்பி ஓடியுள்ளனர். அவ்வேளையில் குடியிருப்புத் தொகுதிக்கு அண்மித்த வீதியில் போக்குவரத்துக் கடமையில் ஈடுபட்டிருந்த பொலிஸார் அவர்களைக் கைது செய்துள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

## சரா புவனேஸ்வரனின் மணிவிழா



இலங்கைத் தமிழர் ஆசிரியர் சங்கத்தின் முன்னாள் பொதுச் செயலாளரும் தற்போதைய ஆலோசகரும் சிரேஷ்ட விரிவுரையாளருமான சரவணமுத்து புவனேஸ்வரனின் மணி விழாவும் வெற்றித்தேர்வு என்ற நூல் வெளியீடும் எதிர்வரும் ஞாயிற்றுக் கிழமை யாழ்ப்பாணத்தில் இடம்பெறவுள்ளன.

வைத்திய கலாநிதி லயன் வைத்திலிங்கம் தியாகராஜா தலைமையில் நடைபெறவுள்ள இந்த நிகழ்வு நல்லூர் சயன்ஸ் அக்கடமி வளாகத்தில் ஜூன் மாதம் 18 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை காலை 9.30 மணி முதல் இடம்பெறவுள்ளது.

# ட்ரிபிள் அடித்தது மன்செஸ்டர்

இன்டர் மிலானுக்கு எதிராக இஸ்தான்புல்லில் நடைபெற்ற இறுதிப்போட்டியில் 1-0 என வெற்றி பெற்றதன் மூலம் சம்பியன்ஸ் லீக் தொடரொன்றை வெல்வதற்கான மன்செஸ்டர் சிட்டி அணியின் நீண்ட கால அவா நிறைவேறியுள்ளது.

துருக்கியின் இஸ்தான்புல் அரங்கில் நேற்று அதிகாலையில் இடம்பெற்ற இந்தப் பருவகால சம்பியன்ஸ் லீக் இறுதிப் போட்டியில் மன்செஸ்டர் சிட்டி அணிக்காக ரொட்றி 68 ஆவது நிமிடத்தில் கோலடித்தார். அந்த கோல் அந்த அணிக்கான வெற்றிக் கோலாகவும் அமைந்தது.

இன்டர் மிலான் அணிக்கு பல கோலடிக்கும் வாய்ப்புக்கள் வந்த போதிலும் அதனை அவ்வணி வீரர்கள் கோலாக்க தவறிவிட்டனர். இந்தப் போட்டியில் சிட்டி அணியின் நட்சத்திர வீரர்களில் ஒருவரான கெவின் டீ ப்ருயன் முதல் பாதியிலேயே உபாதையடைந்து வெளியேறியிருந்தார்.

இந்த வெற்றி மூலம் முகாமையாளர் பெப் குவார்டியோலாவின் மன்செஸ்டர் சிட்டி அணியானது பிரீமியர் லீக், எஃப்.ஏ. கிண்ணம் மற்றும் இறுதியாக சம்பியன்ஸ் லீக் கிண்ணங்களை வென்று, பிரீமியர் லீக் அணிகளில் இரண்டாவது தடவையாக ட்ரிபிள் அடித்த அணியாக சாதனை படைத்தது. இதற்கு முன் இந்த சாதனையை 1999 இல் சேர் அலெக்ஸ் பெர்குசன் முகாமைத்துவம் செய்த மன்செஸ்டர் யுனைடெட் அணி படைத்திருந்தது.



# பாடசாலைகள் இன்று முதல் மீண்டும் ஆரம்பமாகின

அரச மற்றும் அரச அனுமதி பெற்ற தனியார் பாடசாலைகளின் 2023 ஆம் ஆண்டுக்கான முதலாம் தவணையின் மூன்றாம் கட்ட கல்வி நடவடிக்கைகள் இன்று ஆரம்பமாகியுள்ளன.

கடந்த மே 26 ஆம் திகதி கல்விப் பொதுத்தராதர சாதாரண தரப் பரீட்சைக்காக பாடசாலைகளுக்கு விடுமுறை வழங்கப்பட்டிருந்தது. இன்று ஆரம்பமாகியுள்ள முதலாம் தவணையின் மூன்றாம் கட்டமானது ஜூலை 21 ஆம் திகதி வரை நடைபெறவுள்ளது. இரண்டாம் தவணைக் கல்வி நடவடிக்கைகள் ஜூலை 24 முதல் ஆரம்பமாகும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

## தொல்பொருள் திணைக்களப் .....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பயன்படுத்த முற்படுவது குறித்தும் எச்சரிக்கப்பட்டிருந்தது.

அண்மையில் வடக்கு, கிழக்கு தமிழ் நாடாளுமன்ற உறுப்பினர்களைச் சந்தித்து ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க கலந்துரையாடியிருந்தார். இதன்போது வடக்கு கிழக்கில் மேற்கொள்ளப்படும் பௌத்தமயமாக்கல் மற்றும் தொல்பொருள் திணைக்களத்தினால் காணிகள் அபகரிக்கப்படுவது குறித்து சுட்டிக்காட்டப்பட்டது.

அப்போது வடக்கு, கிழக்கில் தமிழர்களின் காணிகள் சுவீகரிக்கப்படுவதை நிறுத்துமாறும், பௌத்த விகாரைகளைக் கட்டும் பணிகளை இடைநிறுத்துமாறும் ஜனாதிபதி உத்தரவிட்டிருந்தார். இருப்பினும் தொல்பொருள் திணைக்களம் தமது செயற்பாடுகளை இன்னமும் நிறுத்திக் கொள்ளாத நிலையில், அவர் இராஜினாமா செய்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

உங்கள் பிரதேசத்து நிகழ்வுகள் பற்றிய விபரங்களை எமக்கு அனுப்பிட
- maalaikkathir@gmail.com

# பிலிப்பைன்ஸ் எரிமலை வெடிப்பு மக்கள் அவசரமாக வெளியேற்றம்



பிலிப்பைன்ஸ் நாட்டின் மாயோன் எரிமலை வெடிப்பிலிருந்து நச்சுவாயுவோடு கரும்புகை வெளியேறி வருவதால் அப்பகுதியில் வசிக்கும் மக்கள் வெளியேற்றப்பட்டு வருகின்றனர்.

பிலிப்பைன்ஸ் மத்திய மாகாணமான அல்பேயில் உள்ள மயோன் மலையிலிருந்து சூடான பாறைகள் விழுவதாகவும் ஆய்வாளர்கள் தெரிவித்துள்ளனர்.

13,000இற்கும் அதிகமான மக்கள் அப்பகுதியில் வசித்து வந்த நிலையில், இனி வரும் நாட்களில் எரிமலை வெடிப்பு தீவிரமடையும் பட்சத்தில் மேலும் அதிகமான மக்கள் வெளியேற்றப்படலாம் என பிலிப்பைன்ஸின் தலைமை எரிமலை நிபுணர் தெரசிட்டோ பேகோல்கோல் தெரிவித்துள்ளார்.

எரிமலை வெடிப்புகளுக்கு விடப்படும் உச்சபட்ச எச்சரிக்கையான ஐந்து நிலைகளில் தற்போது மூன்றாவது படிநிலை எச்சரிக்கையை பிலிப்பைன்ஸ் அரசு அறிவித்துள்ளது.

## மத்திய அரசின் அவசரச்சட்டம் பிற மாநிலங்களுக்கும்

### டெல்லி முதலமைச்சர் அரவிந்த் கெஜ்ரிவால் எச்சரிக்கை!



டெல்லியில் யாருக்கு அதிகாரம் என்பது தொடர்பான வழக்கில், அதிகாரிகளை நியமனம் மற்றும் இடமாற்றம் செய்யும் அதிகாரம், மாநில அரசுக்குத்தான் இருப்பதாக இந்திய சுப்ரீம் கோர்ட் தீர்ப்பு அளித்தது. ஆனால், அதை நீர்த்துப்போகச் செய்யும் வகையில், அந்த அதிகாரத்தை பறிப்பதற்கான ஓர் அவசர சட்டத்தை இந்திய மத்திய அரசு கொண்டு வந்துள்ளது.

வருகிற நாடாளுமன்றக் கூட்டத்தொடரில், இதற்கான மசோதாவை நிறைவேற்றி சட்டமாக்க மத்திய அரசு திட்டமிட்டுள்ளது. எனவே, நாடாளுமன்றத்தில் அம்மசோதாவை ஆதரிக்க வேண்டாம், என்று டெல்லி முதலமைச்சர் அரவிந்த் கெஜ்ரிவால், எதிர்க்கட்சித் தலைவர்களைச் சந்தித்து ஆதரவு திரட்டி வருகிறார்.

இந்த நிலையில், இந்தக் கோரிக்கையை வலியுறுத்தி, டெல்லி ராமலீலா மைதானத்தில் ஆம் ஆத்மி கட்சியின் பிரமாண்ட பொதுக்கூட்டம் நடைபெற்றுள்ளது. அதில், பஞ்சாப் மாநில முதல்மைச்சர் பகவந்த் மான், சுயேச்சை எம். பி. கபில்சிபல் உள்ளிட்டோர் கலந்துகொண்டனர்.

சுப்ரீம் கோர்ட் உத்தரவை ஏற்க மாட்டேன் என்று பிரதமர் மோடி சொல்வது ஹிட்லரின் சர்வாதிகாரம் போன்றது. இப்போது, மக்கள் உயர்ந்தவர்கள் அல்ல, ஆளுநர்தான் உயர்ந்தவர் என்று ஆகிவிடடது. இந்த அவசரச் சட்டத்துக்கு எதிராக நாடு முழுவதும் சென்று எதிர்க்கட்சித் தலைவர்களைச் சந்தித்தேன்.

நாம் தனியாக இல்லை. 140 கோடி மக்களும் நமக்கு ஆதரவாக உள்ளனர். ஜனநாயகத்தையும், அரசியல் சட்டத்தையும் பாதுகாக்க இச் சட்டத்தை எதிர்ப்போம். மாநிலங்களவையில் தோற்கடிப்போம். இப்போராட்டம் வெற்றி பெறும், என்று அரவிந்த் கெஜ்ரிவால் தனதுரையில் குறிப்பிட்டிருக்கிறார்.

## சீனாவில் மக்கள் தொகை தொடர்ந்தும் வீழ்ச்சியில்




சீனாவில் மக்கள் தொகை தொடர்ந்து வீழ்ச்சியடைந்து வருவதோடு, திருமணப் பதிவுகளின் எண்ணிக்கையிலும் சரிவு நிலை காணப்படுவதாக அந்த நாட்டுச் செய்திகள் தெரிவிக்கின்றன.

கடந்த 2022 ஆம் ஆண்டில் திருமணப் பதிவுகள் குறிப்பிடத்தக்களவில் வீழ்ச்சியடைந்துள்ளதாகவும், கொரோனாச் சூழ்நிலையால் இந்தப் பாதிப்புக்கள் ஏற்பட்டிருக்கலாம் எனவும் தெரிவிக்கப்படுகின்றது.

இதன்படி, முந்தைய ஆண்டுகளை விட சுமார் 800,000 பதிவுகள் குறைந்துள்ளதாக சீனாவின் சிவில் விவகார அமைச்சு வெளியிட்டுள்ள இணையத்தளத் தரவுகளின் அடிப்படையில் அறியமுடிகின்றது.

2021ஆம் ஆண்டில் 7.52 ஆகக் காணப்பட்ட திருமணப் பதிவு வீதம் கடந்த ஆண்டு 6.77 சதவீதமாகக் காணப்பட்டதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

இதனையடுத்து, கடந்த மாதம் தொடக்கம் மக்கள் தொகையை அதிகரிப்பதற்காகவும் திருமணத்தை ஊக்குவிப்பதற்காகவும் பிறப்பு வீதத்தை அதிகரிப்பதற்காகவும் இருபதுக்கும் மேற்பட்ட புதிய திட்டங்களை ஆரம்பித்துள்ளதாக சீனா தெரிவித்துள்ளது.



## ஆஸியில் பேருந்து விபத்து 10 பேர் பலி 25 பேர் காயம்

அவுஸ்திரேலியாவின் ஒயின் பிரதேசத்தின் ஹண்டர் பள்ளத்தாக்கில் நேற்று நடந்த பயங்கரமான பேருந்து விபத்தில் குறைந்தபட்சம் 10 பேர் உயிரிழந்துள்ளன எனவும் 25 பேர் மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டுள்ளதாகவும் சிலர் மேலதிக மருத்துவ சிகிச்சைக்காக சிட்னிக்கு அனுப்பப்பட்டனர் எனவும் அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

திருமண நிகழ்வொன்றில் கலந்துவிட்டுத் திரும்பும்போதே குறித்த விபத்து இடம்பெற்றுள்ளது. விபத்தையடுத்து, 58 வயதான பேருந்தின் சாரதி கைதுசெய்யப்பட்டுள்ளார். அவருக்கு காயங்கள் எதுவும் ஏற்படவில்லை எனப் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.



## பாகிஸ்தானில் கனமழை வீடுகள் சேதம் 34 பேர் பலி

பாகிஸ்தானின் வடமேற்குப் பகுதிகளில் பெய்துவரும் கனமழை காரணமாக குழந்தைகள் உட்பட 34 பேர் உயிரிழந்துள்ளதோடு, நூற்றுக்கணக்கானோர் காயங்களுக்குள்ளாகியுள்ளனர்.

கடந்த சனிக்கிழமை பாகிஸ்தானின் பல பகுதிகளில் பெய்த கனமழை காரணமாக வீடுகள் சரிந்து விழுந்து சேதடைந்துள்ளன.

இதற்கிடையே, அரபிக்கடல் பகுதியில் இருந்து பிபர்ஜாய் புயல் நெருங்கி வருவதால், நாட்டின் தெற்குப் பகுதிகளில் அவசரகால நடவடிக்கைகளைத் துரிதப்படுத்த பாகிஸ்தான் பிரதமர் ஷெபாஸ் ஷெரீப் உத்தரவிட்டுள்ளார்.

# தமிழ் எம்.பிக்கள் அடங்க வேண்டும் இல்லையேல் சிறைதான் வாழ்க்கை!

## மிரட்டுகின்றார் சரத் வீரசேகர



தமிழ் நாடாளுமன்ற உறுப்பினர்கள் எடுத்ததுக்கெல்லாம் உணர்ச்சி வசப்பட்டுத் துள்ளிக் குதித்தாமல் இருக்க வேண்டும். அவர்கள் அடக்கி வாசிக்க வேண்டும். இல்லையேல் சிறையில்தான் அவர்கள் அடைக்கப்படுவார்கள்!, இவ்வாறு மிரட்டல் பாணியில் தெரிவித்துள்ளார் ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் நாடாளுமன்ற உறுப்பினர் சரத் வீரசேகர.

சமகால அரசியல் நிலவரம் தொடர்பில் அவர் கூறுகையில், நாடாளுமன்றச் சிறப்புரிமையைப் பயன்படுத்தி எதனையும் சாதிக்கலாம் என்று கஜேந்திரகுமார், சாணக்கியன் உள்ளிட்ட தமிழ் நாடாளுமன்ற உறுப்பினர்கள் எண்ணுகின்றார்கள். இது அவர்களின் அறியாத்தனம் என்றே கூறவேண்டும். இதற்காக அவர்களை நாடாளுமன்றத்துக்கு அனுப்பிவைத்த தமிழ் மக்கள் வெட்கித் தலைகுனிய வேண்டும்.

பொலிஸாருடன் சண்டித்தனம் காட்டும் அளவுக்குத் தமிழ் நாடாளுமன்ற உறுப்பினர்களுக்குத் துணிவு வந்துள்ளது. இப்படியானவர்களைக் கைது செய்து அவர்களுக்குப் பிணை வழங்காமல் சிறையில்தான் தொடர்ந்து அடைத்து வைத்திருக்க வேண்டும்.

தமிழ் நாடாளுமன்ற உறுப்பினர்களின் வாய்ச்சவடால் நாடாளுமன்றத்திலும் சரி, வெளியிலும் சரி எடுபடாது. முதலில் அவர்கள் சட்டம், ஒழுங்கு தொடர்பில் நன்றாகத் தெளிவடைந்திருந்த வேண்டும், என்றார்.



## அதிர்ஷ்ட இலாப சீட்டுகளின் விலை இரு மடங்காக அதிகரிக்கப்படும்

இலங்கையில், அதிர்ஷ்ட இலாப சீட்டுகளின் விலைகளை இரண்டு மடங்காக அதிகரிப்பதற்கு அரசாங்கம் நடவடிக்கை எடுத்துள்ளதாக தகவல்கள் வெளியாகியுள்ளன.

எதிர்வரும் ஜூலை மாதம் முதலாம் திகதி முதல் லொத்தர் சீட்டு ஒன்றின் விலையை 40 ரூபாவாக அதிகரிக்க அரசாங்கம் நடவடிக்கை எடுத்து வருவதாக அகில இலங்கை லொத்தர் விநியோகஸ்தர்கள் சங்கத்தின் தலைவர் கிருஷாந்த மரம்பகே தெரிவித்தார்.

அதன் படி, இருபது ரூபாய்க்கு விற்பனை செய்யப்படும் அதிர்ஷ்ட இலாபச் சீட்டின் விலை இனிவரும் காலங்களில் 40 ரூபாவாக இருக்குமென தேசிய லொத்தர் சபை மற்றும் அபிவிருத்தி லொத்தர் சபைச் செய்திகள் தெரிவிக்கின்றன.

## கதிர்காமத்துக்கான காட்டுப்பாதை திறப்பு

வரலாற்றுப் பிரசித்தி பெற்ற கதிர்காமம் ஆடிவேல் விழா உற்சவத்தையொட்டிய கதிர்காமத்துக்கான குமுண தேசிய பூங்கா ஊடான காட்டுப்பாதை இன்று திங்கட்கிழமை கழுகுமலை பத்து பாடிபின் கிழக்கு மாகாண ஆளுநர் செந்தில் தொண்டமான் முன்னிலையில் காலை 7.30 மணியளவில் திறந்துவைக்கப்பட்டுள்ளது.

இம்முறை காட்டுப்பாதையூடாக சுமார் நாற்பத்தைந்தாயிரம் பக்தர்கள் பாதயாத்திரையை மேற்கொள்வார்கள் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

இன்று காலை 5.30 மணிக்கு உகந்தை மலை முருகன் ஆலயத்தில் பிரதம குரு சிவசிறி க.கு. சீதாராம் குருக்கள் விசேட பூசை நடாத்தி ஆசியுரை வழங்கினார். இந்த நிகழ்வில் அம்பாறை மாவட்ட அரசாங்க அதிபர் ஜெ.என்.டக்ளஸ், மேலதிக அரசாங்க அதிபர் வேதநாயகம் ஜெகதீசன், லாகுகலை பிரதேச செயலாளர் என்.நவநீதராஜா, மொனராகலை மாவட்ட அரசாங்க அதிபர், ஆலய வண்ணக்கர் சுது நிலமே திஸாநாயக்க உள்ளிட்ட பலர் கலந்துகொண்டனர். இந்து சமய கலாசார அலுவல்கள் திணைக்களப் பணிப்பாளர் அனிருத்தனின் ஆலோசனைக்கமைவாக மாவட்ட கலாசார உத்தியோகத்தர் கு.ஜெயராஜியின் ஏற்பாட்டில் காட்டுப்பாதை திறந்து வைக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

## ரஷ்ய சுற்றுலாப் பயணிகளின் வருகை கிழக்கில் அதிகரிக்கும் தூதுவர் உறுதி



இலங்கைக்கான ரஷ்யத் தூதுவர் லெவன் எஸ்.ட்ஜகார்யன் இலங்கைக்கு உத்தியோகபூர்வப் பயணம் மேற்கொண்டுள்ளார் .

இவர் நேற்றையதினம் திருகோணமலையில் உள்ள ஆளுநர் செயலகத்திற்கு மரியாதை நிமித்தம் வருகை தந்ததுடன் கிழக்கு மாகாணத்தின் இப்போதைய அபிவிருத்திப் பணிகள் குறித்து கிழக்கு மாகாண ஆளுநர் செந்தில் தொண்டமானுடன் கலந்துரையாடியுள்ளார்.

இதன்போது கிழக்கு மாகாணத்திற்கு வருகைதரும் ரஷ்ய சுற்றுலாப் பயணிகளின் வருகையை அதிகரித்துத் தருவதாக ரஷ்யாவின் தூதுவர், கிழக்கு மாகாண ஆளுநரிடம் உறுதியளித்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

## தொலைக்காட்சி நடுவரின் தீர்ப்புக்கு எதிர்ப்பு சுப்மன் கில்லுக்கு 15 சதவீத அபராதம் விதிப்பு




உலக டெஸ்ட் சம்பியன்ஷிப் இறுதிப்போட்டியின்போது மூன்றாவது நடுவரின் தீர்ப்பை தனது டுவிட்டர் பக்கத்தில் விமர்சித்ததற்காக சுப்மன் கில் மீது ஐ.சி.சி. போட்டி ஊதியத்தில் 15 சதவீத அபராதத்தை விதித்துள்ளது. ஏற்கனவே தாமதித்துப் பந்துவீசியதற்காக ஒட்டுமொத்த இந்திய அணியுமே தமது மொத்த போட்டி ஊதியத்தையும் தண்டப்பணமாக செலுத்தவேண்டியுள்ள நிலையில், மேலதிகத் தண்டனையைப் பெற்றுள்ள சுப்மன் கில், 115 சதவீதமாக அபராதத்தைச் செலுத்தும் நிலைக்குள்ளாகியுள்ளார்.

ஆஸ்திரேலிய அணிக்கெதிரான இரண்டாவது இன்னிங்சில் சுப்மன் கில் ஸ்கொட் போலன்ட் வீசிய பந்தை அடிக்க, அதை கமரூன் க்ரீன் பிடித்த நிலையில், தொலைக்காட்சி நடுவர் ரிச்சர்ட் கெட்டில்பரோ, சுப்மன் கில் ஆட்டமிழந்ததாக அறிவித்தார். இந்த சர்ச்சைக்குரிய பிடியெடுப்பு பெரிய பேசுபொருளாகவும் மாறியது.

இதையடுத்து, சுப்மன் கில் தனது டுவிட்டர் பக்கத்தில் மூன்றாவது நடுவரின் முடிவை விமர்சனம் செய்யும்விதமாக பதிவு இட்டிருந்தார். இதைத் தொடர்ந்து, நடுவரின் முடிவை விமர்சனம் செய்யும் விதமாக பதிவிட்ட சுப்மன் கில்லுக்கு, போட்டிக்கான ஊதியத்தில் 15 சதவீதம் அபராதத்தை ஐ.சி.சி. விதித்துள்ளது.

இந்தப் போட்டியில் இந்தியா குறித்த நேர இலக்கைவிட ஐந்து ஓவர்கள் குறைவாக பந்து வீசியதாகவும், அவுஸ்திரேலியா நான்கு ஓவர்கள் குறைவாக பந்து வீசியதாகவும் ஐ.சி.சி.யின் அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

இதனால் ஒரு ஓவருக்கு போட்டிக் கட்டணத்தில் 20 சதவீதம் அபராதம் விதம், இந்திய அணிக்கு 100 வீத அபராதமும், அவுஸ்திரேலிய அணிக்கு 80 வீத அபராதமும் விதிக்கப்பட்டது.

## காத்தான்குடியில் சுற்றிவளைப்பு ஐஸ் போதை வியாபாரி கைது

காத்தான்குடியில் பொலிஸார் நடத்திய திடீர் சுற்றி வளைப்பில் ஐஸ் போதைப் பொருள் வியாபாரியொருவர் நேற்று கைது செய்யப்பட்டுள்ளதாக காத்தான்குடி பொலிஸ் நிலைய போதைப்பொருள் ஒழிப்புப் பிரிவுப் பொறுப்பதிகாரி எச்.எம். சியாம் தெரிவித்துள்ளார்.

பொலிஸாருக்கு கிடைக்கப்பெற்ற தகவலொன்றின் அடிப்படையில், காத்தான்குடி டீன் ஜவ்பர் ஆலிம் வீதியில், குறித்த வியாபாரி ஐஸ் போதைப் பொருளை விற்பனை செய்து கொண்டிருந்த நிலையில் கைது செய்யப்பட்டுள்ளார். இதன்போது அவரிடமிருந்து 5850 மில்லி கிராம் ஐஸ் போதைப் பொருளும் 19000 ரூபாய் பணமும் கைப்பற்றப்பட்டுள்ளன.

குறித்த நபர் ஏற்கனவே மட்டக்களப்பு நீதவான் நீதிமன்றத்தினால் திறந்த பிடியாணை வழங்கப்பட்டு தேடப்பட்டு வந்தவர் என்பது குறிப்பிடத்தக்கது. கைதான சந்தேகநபர் மட்டக்களப்பு நீதவான் நீதிமன்றத்தில் முன்னிலைப்படுத்தப்படவுள்ளதுடன் பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

## கனடாவில் நடிகை கஸ்தூரி கலந்துகொண்ட நிகழ்வு




நடிகை கஸ்தூரி கனடா வில் கலந்துகொண்ட Easy Entertaining Night-2023 நிகழ்வு சிறப்புற நடைபெற்றதாக ஏற்பாட்டாளர் கள் தகவல் வெளியிட்டுள்ளனர்.

கலைநிகழ்வுகளின் சங் கமம், மங்கலகரமான ஆரம் பம், உற்சாகமூட்டும் பேச்சுக்கள் என்பவற்றுடன் நடிகை கஸ்தூரியின் சிறப்பு மிக்க பேச்சுமாக நிகழ்வு கோலாகலமாக நடை பெற்றதோடு, நம் நாட்டுக் கலை ஞர்களின் ஆளுமைகளை வெளிக்காட்டும் வகையில் பல நிகழ்வுகள் மேடையில் அரங்கு கேற்றப்பட்டுள்ளன.

இந்த நிகழ்வு மகிழ்ச்சிக்குரிய நிகழ்வாக மாத்திரமின்றி தமிழர் விடு தலை உணர்வையும் விழிப்பையும் ஏற்படுத்தும் விதமாகவும் இடம்பெற்றுள்ளது.

இந்நாளிதழ் யாழ்ப்பாணம் இல.68, குறசெட் வீதியிலுள்ள Green Media House Pvt Ltd. நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 12.06.2023இல் வெளியிடப்பெற்றது.